**மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் இலங்கை தேசிய சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் இலங்கை தேசிய சபையின் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் காண்பிக்கப்படுகிறது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, தேசிய சபையின் நிதிக் கூற்றுகளின் ஊடாக 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தேசிய சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தேசிய சபையை

கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

தேசிய சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக தேசிய சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி தேசிய சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு தேசிய சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தேசிய சபைக்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து அதிகார சபையின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது தேசிய சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பில் கணக்காய்வாளரின் அவதானிப்புகள்

---

### 1.5.1 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

---

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல்,

குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ''சிறப்பாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை தேசிய சபையால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| அரச மூலதன அளிப்புகளின்கீழ் கொள்வனவு செய்யப்பட்டு, முற்றுமுழுதாக தேய்மானம் செய்து முடிவுறுத்திய மோட்டார் வாகனங்கள் 2016 ஆம் ஆண்டில் மீள்கணிப்பீடு செய்து, அதன் தேய்மான செலவினத்தை பொதுவான வகையில் அடையாளம் காணப்பட்டு நிதிக் கூற்றுகளில் சீராக்கப்பட்டிருப்பினும், குறித்த மீதியன் அளவுக்கு சமமான பெறுமதி, மேலும் பிற்போடப்பட்ட வருமானமாக வருமானத்தில் சீராக்கியதன் காரணமாக ஆண்டின் இலாபம் ரூபா.1,823,306 ம் திரட்டிய மிகையாக ரூபா.12,376,694 ம் அதிகமாக நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் இதனை செவ்வைப்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. | தேய்மானம் செய்து முடிவுறுத்திய சொத்துக்களை மீள்கணிப்பீடு செய்த பின்னர் ஏற்படுகின்ற தேய்மானம் பிற்போடப்பட்ட வருமானமாக அடையாளம் காண முடியாதபடியால், செவ்வையாக நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| 30/2016 அரச நிருவாக சுற்றறிக்கை | சுற்றுநிருபத்தின் 3.3 பிரிவு பிரகாரம் இறுதியாக எரிபொருள் பரிசோதனை மேற்கொண்ட திகதி தொடக்கம் பயன்படுத்திய எரிபொருள் அளவு மற்றும் கடந்த மாதம் பயன்படுத்திய எரிபொருள் அளவு தொடர்பான குறிப்புகள் தயாரிக்கப்படவில்லை. | எதிர்வருங் காலங்களில் சுற்றுநிருபங்கள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வதற்கு இணங்குகின்றேன். | சுற்றுநிருபம் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா. 1,193,977 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 5,743,332 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா. 6,937,309 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு கடன்தீர்ப்பு வருமானம் ரூபா. 2,992,446 ஆல் அதிகரித்தல் மற்றும் தேய்மானம் செலவின ரூபா. 1,631,782 ஆல் குறைவடைதலும் பிரதான காரணங்களாகின.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1997 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க மனித வளங்கள் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள, மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் தேசிய சபையின் அடிப்படை பணிகள் மற்றும் அலுவல்களாக தேசிய மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் கொள்கை தயாரித்தலும் அதனை காலோசிதமான வகையில் மீளாய்வு செய்தலும் மனித வளங்கள் அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் மற்றும் அரசாங்கத்திடம் ஆலோசனை வழங்குதலும் என்று குறிப்பிடப்படினும், நிறுவனம் தாபிக்கப்பட்டு 23 ஆண்டுகள் சென்றிருப்பினும், தேசிய மனித வளங்கள் அபிவிருத்தி கொள்கை தயாரிக்கப்படவில்லை | அரசாங்கத்தின் புதிய நோக்கின்கீழ் உள்ளடக்கப்படும் விடய துறைக்கமைவாக "சுபீட்சத்தின் நோக்கு" உடன் சமமாகும் தேசிய மனித வளங்களின் அபிவிருத்தி கொள்கை தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி எமது சபையால் தற்போது ஆலோசனை குழு மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளில் நிபுணர்களைக் கொண்டமைந்த முனைப்பான குழு ஊடாக மனித வளங்களின் அபிவிருத்தி கொள்கை தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது எமது சபையால் எல்லா பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் திட்டங்களின் வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அடிப்படை நோக்கமேனும் நிறைவேற்றப்படாதிருக்கையில் 23 ஆண்டுகள் வரை இந்த நிறுவனம் பராமரித்துச் செல்வதன் தேவை கணக்காய்வின் போது பிரச்சினைக்குரிய விடயமாகும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சட்டத்தின் 16(2)ஈ பிரிவின் படி மனித வளங்கள் அபிவிருத்திக்கு ஏற்புடையதாக பல்வேறு துறைகள் பற்றி தகவல்கள் உள்ளடகிய தரவு வங்கி பராமரிக்கப்படுதல் வேண்டுமாயினும், அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இந்த தரவு வங்கி உருவாக்குவதற்கு போதியளவு நிபுணத்துவ அறிவுள்ள உத்தியோகத்தர் இல்லாமை காரணமாக ஆலோசகர் ஒருவரின் சேவை பெற்றுக்கொள்வதன்மூலம் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அடிப்படை நோக்கமேனும் நிறைவேற்றப்படாதிருக்கையில் 23 ஆண்டுகள் வரை இந்த நிறுவனம் பராமரித்துச் செல்வதன் தேவை கணக்காய்வின் போது பிரச்சினைக்குரிய விடயமாகும். |
| (இ) | சட்டத்தில் 16(2)(1) இல் (ஐ )மற்றும் (ஒ) பிரிவுகளின் படி சபையின் பணிகள் மற்றும் அலுவல்களை நிறைவேற்றுவது தொடர்பில் நிபுணத்துவ குழுக்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நிறுவனத்திடம் அதிகாரம் வழங்கப்பட்டிருப்பினும், 1997 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளாமை காரணமாக நிறுவனத்தின் செயலாற்றுகை மற்றும் அதிகாரம் நிறைவேற்றுதல் தொடர்பில் நேரடி தாக்கம் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வில் அறிய வந்தது. | நிபுணத்துவ குழு தாபிப்பதற்காக தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள நிபுணர்களின் விருப்பம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் கட்டுப்பாட்டுச் சபையிடம் குறித்த நிபுணத்துவ குழுவை முன்னிலைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதி பெற்றுக்கொண்டதன் பின்னர் குறித்த நிபுணத்துவ குழுவின் சேவை எதிர்கால கருத்திட்டங்களின் பொருட்டு பெற்றுக்கொள்ளப்படவுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அடிப்படை நோக்கமேனும் நிறைவேற்றப்படாதிருக்கையில் 23 ஆண்டுகள் வரை இந்த நிறுவனம் பராமரித்துச் செல்வதன் தேவை கணக்காய்வின் போது பிரச்சினைக்குரிய விடயமாகும். |

**3.2 ஏனைய அமைப்புகளின் வளங்களை உபயோகப்படுத்தல்**

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2016 பெப்ருவரி மாதம் தொடக்கம் சபையால் உபயோகப்படுத்திய பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அமைச்சிற்குரிய கெப் வண்டியை கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | அமைச்சிடம் எழுத்திலான வேண்டுகோள் முன்வைக்கப்படினும், உரிமை கையளிக்கப்படவில்லை. | வாகனங்களை பழுதுபார்த்தல் மற்றும் ஏனைய செலவினங்கள் மேற்கொள்வதால் உரிமை கையகப்படுத்துவற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |